# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1918/2 - 2015 ජූනි මස 08 වැනි සඳුදා - 2015.06.08

*1918/2 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் மூலம் எனக்கு உரித்தளிக்கப்பட்டிருக்கும் தத்துவங்களின் பேரிலும் இன்னும் இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரிலும் மின்வலு, சக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆகிய என்னால், இங்கு கீழ்க்காணும் 2009 ஆம் ஆண்டின் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்தலும் விலக்களிப்பும்) பற்றிய கட்டளை பிறப்பிக்கப்பட்டு வெளியிடப்படுகின்றது.

பாட்டலி சம்பிக்க ரணவக்க,
மின்வலு, சக்தி அமைச்சர்.

2015, யூன் 04.

ச.வ.பீ 3/2009

**2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம்**

2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 6 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல் மின்வலு, சக்தி அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மின்வலு, சக்தி அமைச்சர்.

கொழும்பு,
2015, யூன் 04.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் ....... ஆம் இலக்க, மின்சார (மின்பரிசோதகர்களின் பணிகளும், கடமைகளும் மற்றும் நடவடிக்கைமுறைகளும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* மின் பரிசோதகரொருவர், பாவனையாளரொருவரிடமிருந்து எழுத்திலான வேண்டுகோளொன்றைப் பெற்றதன் பின்னர் அல்லது ஆணைக்குழுவிடம் இருந்து பெறப்படும் பணிப்புரையொன்றின் மீது வளவுகளைச் சோதனையிடுதலும், ஏதேனும் மின்வழியை அல்லது மின்பொறித்தொகுதியை அல்லது மின்சார வழங்கலைப் பரீட்சித்தலும் வேண்டுமென்பதுடன், தேவைப்படுத்தப்பட்ட பணியைப் பத்து நாட்களினுள் நிறைவேற்றுதலும் வேண்டும்.

*3.* ஒவ்வொரு வேண்டுகோளும் பின்வருவனவற்றுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும் :-

(அ) வளவுகளின் முகவரி ;
(ஆ) வேண்டுகோளின் நோக்கம் ;
(இ) இருநூற்றைம்பது ரூபா (250 ரூபா) கொடுப்பனவுக்கான பற்றுச்சீட்டு.

*4.* மின்பரிசோதகர், மு. ப. 8 மணிக்கும், பி. ப. 5 மணிக்கும் இடையே பாவனையாளரினால் உடன்பட்டுக்கொள்ளப்பட்ட எந்நேரத்திலும் வளவுகளினுட் பிரவேசிக்கலாம்.

*5.* மின்பரிசோதகர், ஆணைக்குழுவின் பணிப்புரையொன்றுக்கிணங்க ஓர் எழுந்தமானச் சோதனையையும் பரீட்சிப்பையும் நிறைவேற்றும் போது, தமது ஆளடையாளத்தையும் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட எழுத்திலான அதிகாரவளிப்புடனும், அவரது சோதனைக்கும் பரீட்சிப்புக்குமான காரணங்களுடனும் சேர்த்துக் காண்பித்தல் வேண்டும்.

*6.* மின்சாரத்தைப் பிறப்பாக்கஞ் செய்வதற்கு, கடத்துவதற்கு, விநியோகிப்பதற்கு அல்லது வழங்குவதற்கு உரிமமொன்றினால் அதிகாரமளிக்கப்பட்ட அல்லது உரிமமொன்றைப் பெறுவதற்கான தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆட்களுக்குச் சொந்தமான மின்வழிகள் மற்றும் மின் பொறித்தொகுதிகளின் மீது ஒரு சோதனையையும் பரீட்சிப்பையும் மின் பரிசோதகர் ஒருவர் நடாத்தும் போது, அத்தகைய ஆட்கள் எல்லாப் பதிவேடுகளையும் அல்லது சரிபார்த்தலுக்கு இயைபான வேறெவையேனும் தகவல்களையும் கொடுத்துதவுதல் வேண்டுமென்பதுடன், செம்மையைப் பரீட்சிப்பதற்கான எல்லாச் செம்மைப்படுத்திய கருவிகளுக்கான அணுகுகையை வழங்குதலும் வேண்டும்.

*7.* ஒரு மின்பரிசோதகரினால் சோதனை மற்றும் பரீட்சிப்பு ஒன்று நடாத்தப்படும் போது, உரிமம்பெற்றவர் அல்லது உரிமமொன்றைப் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆளொருவர் உரியமுறையில் அதிகாரமளிக்கப்பட்ட ஊழியர் அல்லது முகவர் ஒருவரினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படலாம்.

*8.* மின்பரிசோதகரினால் நடாத்தப்பட்ட சோதனை மற்றும் பரீட்சிப்புப் பற்றிய அறிக்கையொன்று அவரினால் தயாரிக்கப்படுதலும் அத்தகைய சோதனை மற்றும் பரீட்சிப்பு முடிவுற்றதிலிருந்து பதினான்கு (14) நாட்களினுள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.

*9.* அறிக்கையைச் செய்வதில், மின்பரிசோதகர் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும் :-

(அ) சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏதேனும் மீறுகை உள்ளதாவென்றும் ;

(ஆ) ஏதேனும் மீறுகையிருப்பின், அம்மீறுகையின் விளைவு அல்லது தன்மை ;

(இ) மின்வழிகளை அல்லது மின்பொறித்தொகுதியைப் பயன்படுத்துவதனை அல்லது மின்சாரத்தைப் பிறப்பாக்கஞ்செய்வதனை, கடத்துவதனை மற்றும் விநியோகிப்பதனை அல்லது வழங்குவதனைத் தடைசெய்தல் உட்பட, பொதுமக்களின் சேமக் காப்பைப் பாதுகாக்கும் பொருட்டு எடுக்கப்படவேண்டிய அவசர நடவடிக்கைகள் மீதான விதப்புரைகள் ; அத்துடன்

(ஈ) குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கான பரிகரிப்பு வழிமுறைகள்.

*10.* ஆணைக்குழுவானது, மின்பரிசோதகரின் அறிக்கையை, விடயத்துக்கேற்ப, வேண்டுகோளை விடுத்த பாவனையாளருக்கு அல்லது உரிமம்பெற்றவருக்கு அல்லது உரிமமொன்றைப் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆளுக்குப் பதிவுத்தபால்மூலம் அறிவித்தல் வேண்டும்.

*11.* பத்தாம் ஒழுங்குவிதியின் கீழ் அவருக்கு அறிவிக்கப்பட்ட தீர்மானத்தினால் இன்னலுற்றவரான விடயத்துக்கேற்ப, பாவனையாளர், உரிமம்பெற்றவர் அல்லது உரிமமொன்றைப் பெறுவதிலிருந்து விலக்களிக்கப்பட்ட ஆள், அத்தீர்மானம் அவருக்கு எத்திகதியன்று அறிவிக்கப்பட்டதோ அத்திகதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் அத்தகைய தீர்மானத்துக்கெதிராக எழுத்தில் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கலாம்.

*12.* அத்தகைய ஒவ்வொரு கடிதத்தொடர்பையும், ஆணைக்குழு, பிணக்கைத் தீர்த்துவைப்பதற்கென மத்தியஸ்தர்கள் குழாமொன்றுக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

*13.* ஆணைக்குழுவுக்கு வேண்டுகோளொன்றைச் செய்கின்ற ஒவ்வோராளும் இருநூற்றைம்பது ரூபா (250 ரூபா) கட்டணமொன்றைச் செலுத்துதல் வேண்டும்.

*14.* பதின்மூன்றாம் ஒழுங்குவிதியின் கீழ் செலுத்தப்படற்பாலதான கட்டணம் அல்லது வங்கி வரைவு மூலம் "இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின்" சார்பாக வரையப்பட்ட பணக்கட்டளை மூலம் செலுத்தப்படுதல் வேண்டும்.

*15.* பதின்மூன்றாம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட கட்டணம், அத்தகைய வேண்டுகோள் சரியானதென மின்பரிசோதகரினால் அல்லது ஆணைக்குழுவினால் காணப்படின், அத்தகைய வேண்டுகோளை விடுக்கும் ஆளுக்குத் மீளளிக்கப்படுதல் வேண்டும்.

*16.* (இதனகத்துப்பின்னர் ஒரு "நிதி ஆண்டு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஏதேனும் பஞ்சாங்க ஆண்டு முடிவடைந்த பின்னர் ஒரு மாதத்தினுள் மின்பரிசோதகரொருவர், ஆணைக்குழுவினால் அவருக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட வேண்டுகோள்களின் எண்ணிக்கை, அவரினால் விதந்துரைக்கப்பட்ட பரிகார வழிமுறைகள் மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அவரது விதப்புரைகளின் பயனுறுதன்மை என்பன பற்றிய தகவல்கள் உட்பட, அவ்வாண்டின்போது அவரது பணிகளின் செயல் நிறைவேற்றுகை பற்றிய விபரங்களைத் தருகின்ற ஆண்டறிக்கையொன்றைத் தயாரித்து ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

*17.* மின்பரிசோதகர்களின் செயற்பாடுகள் பற்றிய கணக்காய்வு, ஆணைக்குழு காலத்துக்குக்காலம் முடிவு செய்யக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் இடம்பெறுதல் வேண்டுமென்பதுடன், செயற்பாடுகளின் கணக்காய்வு குறைந்தது ஒவ்வொரு நிதியாண்டிலும் ஒரு தடவையேனும் இடம்பெறுதலும் வேண்டும்.

*18.* இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய :-

"சட்டம்" என்பது, 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டம் என்று பொருளாகும் ; அத்துடன்

"ஆணைக்குழு" என்பது, 2002 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு என்று பொருளாகும்.

*19.* 2014.10.10 ஆந் திகதிய 1883/12 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2014 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மின்சார (மின்பரிசோதகர்களின் பணிகளும், கடமைகளும் மற்றும் நடவடிக்கை முறைகளும்) ஒழுங்குவிதிகள் இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

6- 599

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.